REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

## கண்ணீர்ப்புகையா? துப்பாக்கிப்பிரயோகமா?

அறப்போர் வீரர்கள் கோவாவுக்குள் பிரவேசிப்பார்களானால், கண்ணீர்ப்புகை—அவசியமானால் துப்பாக்கிப்பிரயோகம் செய்தாவது அவர்களைத் தடுப்பதென போர்ச்சுகல் அதிகாரிகள் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

27-ந் தேதியன்று, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் லிமாயி, தொண்டர் குழுவுடன், கோவாவில் அறப்போரில் ஈடுபடுவாரெனத் தெரிகிறது.

மலர் 2] சென்னை: வைகாசி 11உ புதன் (25—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 12உ வியாழன் (26—5—55) [இதழ் 294

# தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

## மாநில மாநாட்டில் புதுமுறை

## 'ஏதாவதொரு கழகத்தில் சேர்ந்து பணியாற்றுங்கள்'

## இணைப்பாளர்களுக்கு அண்ணுதுரை யோசனை

### கழகத்தின் பண்பு குறித்து விளக்கம்

"திருச்சியில் கூடப் போகும் மாநில மாநாட்டில்—நான் குறிப்பாக மட்டுமே உணர்த்த முடியும்—மிக மிக முக்கியமான முடிவுகளை தி. மு. கழகம் மேற்கொள்ளவிருக்கிறது; மாற்றுக் கட்சித் தோழர்கள் நம்மைப்பற்றிக் கொண்டிருக்கிற தவருன கருத்துக்களுக்கு விளக்கம் தரவிருக்கிறேம்; ஒரு ஜனநாயக அமைப்பு எந்த எந்த நடைமுறைகளைக் கைக்கொள்ள முடியும் என்று எடுத்துக்காட்டவிருக்கிறேம்; நாட்டு மக்களிடை நமது கருத்துக்கு எத்தனை ஆதரவு கிடைத்திருக்கிறது என்பதைப் பரீட்சித்துக்கொள்ளவிருக்கிறேம்."

"தி. மு. கழகம், அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது; நாட்டை மீட்பதற்கு, நான் படித்த வரலாறு—படித்தது சிறிய அளவுதான்; ஆனால், கவனமாகப் படித்திருக்கிறேன்—கூறுகிறபடி இரண்டு வழிகள்தான் உண்டு; ஒன்று, நாட்டில் பெரும் கொந்தளிப்பேற்பட்டு, புரட்சி தோன்றி, விட்டுக்கொருவர், காலத்திற்கொப்ப வேலும் - வாளும் தாங்கியோ, அல்லது துப்பாக்கிகளும் - குண்டுகளும் ஏந்தியோ புரட்சியில் குதித்து, எதிரிகளுக்குப் பயங்கரமான முடிவு தந்து, பலாத்காரமாக நாட்டின் விடுதலையை நிலைநாட்டுவது; மற்றென்று, நாடெங்கணுமுள்ள சட்டசபைகளை—ஆட்சி மன்றங்களை, ஜனநாயக ரீதியாக நடைபெறும் தேர்தல்களின்போது கைப்பற்றி, தொடர்ந்துவரும் தொல்லைகளைச் சமாளித்து, விடுதலையைப் பெறுவது; இந்த இரண்டு வழிகளில் தி. மு. கழகம் இரண்டாவது முறையைப் பரீட்சித்துப் பார்க்கவிருக்கிறது."

*—என்று, சென்னை கோகலே மண்டபத்தில் 24—5—55-ல் நடைபெற்ற கூட்டமொன்றில் சிறப்புரை ஆற்றுகையில், தி. மு. கழக முன்னாள் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்டார்.*

★

### நிகழ்ச்சிகள் விவரம்

சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் 24—5—55 மாலை 6-30 மணியளவில் கோகலே மண்டபத்தில், மாநில மாநாட்டு நிதிக்காக ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. சிறிது நேரம் பேசியதும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக, தோழர் அண்ணுதுரை அவர்கள், பயனும், சுவையும் மிக்கதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு ஒரு ரூபாய், எட்டணு என நன்கொடை செலுத்தி ஆயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர்.

கூட்டத்திற்கான எல்லாச் செலவுகளும் போக, ரூ. 1,008 வசூலானதாக மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இளம்பரிதி அறிவித்தார்.

நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந.த.வி.)

### எப்படி வளர்ந்தோம்?

"தி. மு. கழகம் இந்த நிலைக்கு வளர்ந்ததற்குக் காரணமெல்லாம், கழகத்தவரிடை இருந்த தோழமை உணர்ச்சிதான்—குடும்பப் பாசம் தான்; இந்தத் தோழமை உணர்ச்சி வளர்ந்தால்தான், நாம் மேற்கொண்டிருக்கிற ஜனநாயகப் பாதை நம்மை வெற்றியை நோக்கி இழுத்துச் செல்லும். அந்த வெற்றியைத் தேடிப் பெற கழகத் தோழர்கள் முன்வர வேண்டும்."

—அண்ணுதுரை.

தொடர்ந்து, தோழர் அண்ணுதுரை அவர்கள் பேசியதாவது:—

"இரண்டாம் முறையை நாம் பரீட்சித்துப் பார்க்க விருக்கிறேம் என்பதாலேயே, வரப்போகும் தேர்தலில் தி. மு. கழகத்தவராகிய நாமெல்லோரும் ஈடுபடப் போகிறேம் என்பதல்ல; 'எங்களுக்கு முன்பே தெரியும்—இதனால்தானே அண்ணுதுரை விலகிக்கொண்டார்,' என்று, நாம் இப்படிக் கூறும்போது சிலர் சொல்லக்கூடும்; 'ஏன் இவர்கள் தேர்தலில் நிற்கக்கூடாது?' என்று, வேறு சிலர் பேசக்கூடும்; நாம் தேர்தலில் போட்டியிடாததற்குக் காரணம், 'யாராவது ஆதரிப்பார்களா—ஒத்துழைப்பார்களா—அல்லது, மாட்டார்களா,' என்ற எண்ணத்தால் அல்ல; 'நாம் தேர்தலில் நின்றுல், எதிர்ப்புக் கிளம்பும்,' என்ற அச்சத்தினுலும் அல்ல; தேர்தலில் போட்டியிடாமலிருந்ததற்குக் காரணமெல்லாம், தேர்தலுக்காக சுவரொட்டிகள் அச்சடிப்பதற்குக் கூட நம்மிடம் காசு இல்லை என்பதினுல்தான்!

"வரப்போகும் தேர்தலில் நாம் போட்டியிடுவதா இல்லையா—என்பதை, திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு முடிவு செய்யும்; மாநாட்டிற்கு வரும் ஒவ்வொருவரும், நுழைவுக் கட்டணம் செலுத்தி டிக்கெட் வாங்கும்போதே, அவர்களுக்கு ஒரு வாக்குச் சீட்டுத் தரப்படும்; 'தேர்தலில் போட்டியிடுவதா, வேண்டாமா?'—'போட்டியிடுவதாயின், திராவிடக் கழகத்தின் ஆதரவைப் பெற்று, அல்லது, அவர்களது ஆதரவு கிடைக்காவிட்டாலும் போட்டியிடுவதா?'—என்பன போன்ற கேள்விகள் அந்த வாக்குச் சீட்டில் இடம் பெற்றிருக்கும்; மாநாட்டுப் பந்தலுக்குள், வாக்குச் சீட்டுக்களை நிரப்புவதற்காகப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும்; வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுள்ள தோழர்கள், மூன்று நாட்களும் மாநாட்டில் கூறப்படும் கருத்துரைகளையும் கேட்ட பின்னர், சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்து, தேர்தலில் கலந்துகொள்வது பற்றி அதிலுள்ள கேள்விகளுக்குப் பதில் தருவார்கள்.

"இப்படி, ஜனநாயக முறையில் தோழர்களின் கருத்தறிந்து, அவர்களின் முடிவு, 'தேர்தலில் நிற்பதுதான்' என்றுலும், தேர்தலில், கலந்துகொள்ளக் கூடாது' என்பதுதான் என்றுலும், அதை நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும்; பிறகு வழிவகைகள் ஆராயப்படும்.

"அரசியலில் ஜனநாயக முறைகள் எவ்வளவு அதிகமான அளவு கையாளப்படக்கூடும் என்பதற்கும், இந்த வாக்கெடுப்பு முறை ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்.

"சென்ற முறை நாம் சென்னையில் முதல் மாநில மாநாடு நடத்தியபோது, 'மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம்,'—என்று மாற்றுக்கட்சிப் பத்திரிகைகளே எழுதின; இந்தமுறை, இரண்டாம் மாநில மாநாடு திருச்சியில் நடைபெறும்போது, 'நமது செல்வாக்கு நாட்டில் எந்த அளவு உரம் பெற்றிருக்கிறது,' என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கு உதவக்கூடியதாக இருக்கும்.

"நமக்குக் கிடைத்திருக்கிற கொள்கை மிக உயர்ந்தது; கொள்கையின் உயர்ந்த தன்மைக்கொப்ப, நமக்கு அந்தக் கொள்கையைப் பரப்பவும், கொள்கையின் பொலிவும், வலிவும் குன்றுமல், குறையாமல், மங்காமல் பார்த்துக் கொள்ளவும் போதுமான வசதிகள் இல்லை.

"வாலிபன் ஒருவனுக்கு மணம் முடிப்பதற்காக அவன் பெற்றோர்கள் பெண் பார்த்து வருகின்றனர்; பார்த்து வந்த அந்தப் பெண்ணைப் பற்றி அவனது தாயும் தந்தையும், அல்லது அண்ணனும், மாமனும் பேசிக்கொண்டிருப்பர்; வாலிபன், தூங்குபவனைப்போல், பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருப்பான்;

"'15 அல்லது 16—நிச்சயமாக 17 வயதுக்கு மேலிருக்காது; மாநிறம் என்றனர்; போய்ப் பார்த்த பின்புதான், பெண், தங்கப்பதுமை என்பது தெரிந்தது; அழகு என்றுல் வியக்கத்தக்க அழகு; நவீன வசதிகளுடன் கூடிய பங்களா உண்டு; இரண்டு பெரிய கார்கள்—ஒன்று, பெண்ணின் தகப்பனர் உபயோகத்திற்கும், மற்றொன்று, இந்தப் பெண் எங்காவது வெளியே போய்வருவதற்குமாக—இருக்கின்றன; ஆறு அல்சேஷியன் நாய்களும் உண்டாம்; சொத்து ஆறு லட்சம் என்றனர்—என்றெல்லாம், அவர்கள், பெண்ணைப் பற்றியும், பெண் வீட்டின் பெருமை பற்றியும் பேசக் கேட்டும், வாலிபனுக்கு, இன்ப எண்ணங்கள் முளைவிடுவது, இயற்கைதான்; '15 வயதுதானமே! பொன்நிறமாம்! புது பங்களாவாம்! இரண்டு கார் உண்டாம்!' என்றெண்ணுவதுடன், 'ஆறு நாய்களில் ஒன்றை மாமியாரைத் துரத்தவும், ஒன்றை மைத்துனனைத் துரத்தவும் ஏவலாம்,' என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கலாம்; சற்று கற்பனை உள்ளங் கொண்ட வாலிபனுயிருந்தால், 'எதிர்கால வாழ்வு' பற்றி இன்பக் கனவு கண்டுகொண்டிருக்கலாம்; ஆனுல், சற்று யூகமுள்ள வாலிபன், 'இவ்வளவு வளமான வாழ்வும், அழகும் படைத்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால், அந்தப் பெண்ணைவைத்துக் காப்பாற்றுவதற்குத் தேவையான வாழ்க்கை வசதிகள் நம்மிடம் உண்டா,' என்பதையே எண்ணிப்பார்ப்பான்; ஏனெனில், 60 அடி நீளமுள்ள கூடத்திலும், அழகுமணி மாடத்திலும் உலவிய அந்தப் பெண்ணை, 15 அடி குச்சுக்குள் குடும்பத்தோடு வாழச் செய்ய முடியுமா?

"பெரிய காரில் சவாரி செய்த பெண்ணை சிறிய காரில் ஏற்றிவந்தால், முழங்கால் இடிக்கும்போது அவள் முகம் சுளிக்கும்; தாய் வீடு போனுல், திரும்பிவர நாள் சற்று அதிகமாகும்; எனவே, மணமும், குணமும் கொண்ட பெண்ணை, கோணமல், குன்றுமல், மங்காமல் வைத்துக் காப்பாற்றத் தேவையான வசதிகளையும், வழிகளையும் பற்றித்தான் யூகமுள்ள வாலிபன் எண்ணுவான்.

"அதே போலத்தான், மிக உயர்ந்த கொள்கையைக் காப்பாற்ற, மங்காமல் ஒளிவிடச் செய்ய ஒரு கட்சிக்கு நல்ல வசதிகளும், வாய்ப்புகளும் தேவையானதாகும்.

"அப்படிப்பட்ட குணமும், மணமும் கொண்ட கொள்கையுடைய நமக்கு வசதிகளே இல்லையா என்றுல், இருக்கின்றன—வேறு பலருக்கு இல்லாத வசதிகளும் இருக்கின்றன—ஆனுல், நமது கொள்கையின் குணத்திற்கும், மணத்திற்கும், தரத்திற்கும் தேவையான அளவு 'அதிக வசதிகள்' நம்மிடம் இல்லை;

"நாம் தி. மு. கழகத்தைத் துவங்கும்போது, 'இப்படி ஒரு கழகத்தைத் துவக்குவது பற்றி உங்கள் கருத்தென்ன?'—என்று வெளியூர்த் தோழர்களிடம் 'டிரங் டெலிபோன்' மூலம் கேட்பதற்குக் கூட நம்மிடம் காசு இருக்கவில்லை; ஆனுல், இன்று, கழகத்திற்காக ஒரு பெரிய மாளிகை; பத்திரிகைக்கான பெரியதோர் அச்சகம் இருக்கின்றன; மேலும், தேனும்பேட்டையில் காங்கிரஸ்காரர்கள் ஒரு மைதானம் வைத்திருப்பதைப் போல, நாமும், சென்னையில், பெரியதோர் மைதானம் வாங்கவிருக்கிறேம்; என்றுலும்—இத்தனை வசதிகளிருக்கின்றன என்றுலும், நமது கொள்கை பரவ, இன்னும் நியாயமாக நமக்கிருக்க வேண்டிய வசதிகள் மிகக் குறைவு; அந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பைக்கூட, மாநில மாநாட்டின்போது, நாம் பயன்படுத்திக்கொள்ளவிருக்கிறேம்; மாநில மாநாட்டில், பல அரசியல் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகள் மேற்கொள்ளவிருக்கிறேம் என்பதற்கும் அப்பால், அதில் கிடைக்கும் பொருளாதார இலாபத்தைக் கொண்டு, கழகத்தின் வாய்ப்புகளையும், வசதிகளையும் நாம் பெருக்கிக் கொள்ளவிருக்கிறேம்."

## பாண்டுங் மாநாட்டில் நமது குரல்?

"பாண்டுங் மாநாடு பற்றி பத்திரிகைகளில், சில நாட்களுக்கு முன்பு நாம் பார்த்தோம்; பலவகையான தோற்றங்களில் படங்கள்; பத்திரிகை முழுவதும் பாண்டுங் பற்றிய

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—5—'55 புதன்

# பொறுத்துப்பார்ப்போம்!

வாதநோய்க்கு மருந்துண்டு; ஆனல், பிடிவாத நோய்க்கு....?

உண்மையாகவே தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவனை உரக்கக் கூவிக்கூட அல்ல—பெயரிட்டுக் கூப்பிட்டே அவன் உறக்கத்தைக் கலைத்து எழுப்பி விடலாம்; ஆனல், தூங்குபவன்போல் பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்ப முடியும்? எவ்வளவுதான் கூவியழைத்தாலும் கூச்சல் போட்டாலும், காதிலேயே விழாதது போல் பாசாங்கு செய்து படுத்துப் புரள்பவனை எப்படி எழுப்புவது?

அறியாமையினல், ஒரு காரியத்தை தவருகச் செய்பவனை, அறிவு புகட்டி, தவறைத் திருத்தி, காரியத்தைச் செவ்வனே செய்ய வைக்கலாம்—முடியும்; ஆனல், அறிந்து கொண்டே, வஞ்சக நெஞ்சுடன் 'தான் செய்தது தவறல்ல; சரியானதுதான்,' என்று வாதிட முற்படுவோரை எப்படித் திருத்த முடியும்? காரியந்தான் எவ்வாறு செவ்வனே நிறைவேறும்?

"இந்தப் பிடிவாத நோயும், பாசாங்குத் தூக்கமும், அறிந்தே தவறு செய்யும் வஞ்சகப் போக்கும் கொண்டவர்கள் நாங்கள் என்பதில் உங்களுக்குச் சந்தேகம் துளியும் தேவையில்லை," என்று கூருமற் கூறுகின்றனர்—கோவாவில் உள்ள போர்த்துகீசிய ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்கள்!

ஒரு காலத்தில், 'உலகத்தின் இத்தனை அளவு நிலப்பரப்பு எங்கள் ஆதிக்கப் பிடியில்' என கூறிப் பெருமைப்பட்ட ஏகாதிபத்திய நாடுகளில் ஒன்ருக மார்தட்டி நின்றதுதான், இங்கிலாந்து! இன்று, அந்த நாட்டு மக்கள்—தங்கள் நாட்டு ஆட்சிப்பீடம், உலகத்து மக்களின் ஒரு பகுதியை அடிமை கொண்டு, அவர்களின் வாழ்வு, வளம், உரிமை, உழைப்பு அத்தனையையும் கொள்ளையடித்து, கொடுமைகள் பல புரிந்து, 'கொடுங்கோலர்கள்' என்ற அவமானத்தை நாட்டிற்குத் தேடித் தந்தனர்—என்று பேசுகிருர்களே தவிர, 'பரந்த சாம்ராஜ்யப் பெருமை' குறித்தல்ல—அவர்கள் பேசிக் கொண்டிருப்பது!

ஒரு நாட்டு மக்கள்—பிறருக்கு அடிமைப்பட்டு, அடக்கி ஆளப்படும்போது, 'நாம் அடிமைகளாயிருப்பது அவமானம்,' என்று எப்படி கருதுகிருர்களோ, அப்படித்தான் இன்று பிறிதோர் நாட்டை அடிமை கொள்வது—அடக்கி ஆள்வது—சுரண்டுவது ஆகியவற்றையும் அவமானம் என்று ஒரு நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

பிறிதோர் நாட்டை தங்கள் நாட்டு ஆளும்வர்க்கம் அடிமை கொள்வதைப் பெருமையாகக் கருதிய காலம் சென்றுவிட்டது.

இன்று, 'அடிமை கொள்வது அவமானத்தை விலக்கு, வாங்குவதைப் போன்றது,' என்று, பெரிய ஏகாதிபத்தியங்களாய் விளங்கிய நாடுகளில் கூட எண்ணம் முகிழ்த்திருக்கிறது.

இந்த எண்ணம், போர்த்துகீசிய நாட்டு மக்களுக்கும் இன்றில்லாவிட்டால் நாளை—அல்லது அதற்கடுத்த நாள் ஏற்படத்தான் போகிறது; அப்போது, இன்று தங்கள் தாயகத்தை அந்நியப் பிடியிலிருந்து மீட்க அறப்போரில் ஈடுபடும் வீரர்கள்மீது அடக்குமுறை அம்புகளை வீசி, தியாகத் தழும்புகளைப் பொறிக்கும் போர்த்துகீசிய ஆளும் வர்க்கத்தினரை, அந்த நாட்டு மக்கள் நிந்திக்காமலிருக்க மாட்டார்கள்.

இதனையும், 'பூமியில் எவரும் இனி எவருக்கும் அடிமை செய்யார்,' என்பதையும் போர்த்துகீசிய ஆட்சியாளர்கள் உணராமலிருக்கின்றனரா என்ருல்—'இல்லை; வெகு நன்ருக உணர்ந்தே இருக்கின்றனர்,' என்று துணிந்து கூறலாம். என்ருலும், 'இந்திய மண்ணிலும் எம் கொடி,' என்ற, எதிர்காலத்தில் அவர்களுக்கு நிந்தையைத் தேடித் தரும் போலிப் பெருமையில் நாட்டங் கொண்டு, பிடிவாதம் காட்டுகிறது — பிடிப்பை அகற்ற மறுக்கிறது — தடி கொண்டு தாக்குகிறது—அறப்போர் வீரர்களை பிடிசாம்பலாக்க நினைத்துத் துப்பாக்கியால் சுடுகிறது.

'பறித்த உரிமையைத் தந்துவிடு! பிறன் உரிமையைப் பிடுங்காதே! பிறநாட்டவரைச் சுரண்டாதே!' என்று சுதந்திர உலகம் உரக்கக் கூவிக்கொண்டிருப்பது, தங்கள் காதில் விழாததுபோல், பாசாங்குத் தூக்கம் போடுகிறது—அந்த ஏகாதிபத்தியம்!

'தங்கள் நாட்டை மீட்டுக் கொள்ள போரில் ஈடுபடும் அறப்போர் வீரர்கள்மீது மிருகத்தனமான அடக்குமுறை அம்புகளை வீசுவது எந்த நியாயத்திற்கும் கட்டுப்பட்டதல்ல,' என்பதைத் தெரிந்துகொண்டும் கூட, 'கொடுங்கோல் முறைப்பை'க் காட்டி வருகிறது அந்த ஆதிபத்தியம்!

'செய்வது தவறு' என்று தெரிந்தும், அதனைச் செய்துவிட்டு, 'செய்தது தவறல்ல—நியாயமானதே,' என்று வாதிட முற்படுகின்றனர் — போர்த்துகீசிய ஆதிபத்தியக்காரர்கள்!

பிடிவாதமும், போலித் தூக்கமும், வஞ்சக நெஞ்சமும் கொண்ட இவர்களுக்கு என்னதான் நியாய அநியாயங்களை இடித்துரைத்தாலும், இங்கிலாந்தையும், பிரான்சையும் சுட்டிக்காட்டினலும் பலன் ஏற்படாது!

'சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவது,' என்று ஏற்கனவே முடிவு செய்துள்ள இந்தியப் பேரரசு, 'முற்றிவிட்ட நெருக்கடி நிலையிலிருக்கும் கோவா பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறது,' என்பதை, பொறுத்திருந்து பார்ப்போம்!

## அகில உலக மாநாடு

### 84 - நாடுகள் பங்கேற்கும்

### ஆக்க வேலைக்கு அணுசக்தியை ஈடுபடுத்துவது பற்றி ஆராயும்

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றி அகில உலக மாநாடு ஒன்று வரும் ஆகஸ்டு 8-ந் தேதி முதல் 20-ந் தேதி வரையில் ஜினீவாவில் நடைபெறும் என்று தெரிகிறது.

அணுசக்தியை சமாதான காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய ஒரு சர்வதேச நிறுவனத்தை அம்மாநாடு நிறுவும் என்றும், கொடிய வியாதிகளை நீக்க அணுசக்தியை உபயோகிக்கும் பிரச்சினையில் மாநாடு தனி கவனம் செலுத்தும் என்றும் தெரிய வருகிறது.

## குஷ்டத்தை ஒழிக்க......!

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏறக்குறைய 20 லட்சம் குஷ்டரோகிகள் இருப்பதாகத் தெரிகிறது. விரிவான முறையில் சிகிச்சையளித்தாலும் பத்தில் ஒருவரே பயன்பெறக் கூடிய வசதியிருக்கிறது; இருந்தாலும், நிவாரண வேலைகள் துரிதமாகநடக்கின்றன.

# பிரிட்டிஷ் அரசியலில் பெண்கள்

## போராட்டமும் தியாகமும் செய்தபின்னர்தான் உரிமை கிடைத்தது!

பிரிட்டனில் நடைபெறும் பொதுத் தேர்தலில் 81-பெண்கள் அபேட்சகர்களாக நிற்கின்றனர். சென்ற தேர்தலில் 71-பெண்கள் போட்டியிட்டனர்; அவர்களில் 17-பேர் வெற்றிபெற்றனர். பிறகு நடந்த உப தேர்தலில் 4-பெண்கள் வெற்றி பெற்றனர். கலைக்கப்பட்ட பார்லிமெண்டில், கன்சர்வேடிவ் கட்சியில் 8-பெண்களும், தொழிற் கட்சியில் 13-பெண்களும் இருந்தார்கள்.

பெண்கள் உரிமைக்காக, பிரிட்டனில் நீண்டகாலம் போராட்டம் நடந்தது; மகத்தான தியாகம் செய்தே உரிமை கிடைத்தது. இன்று வெஸ்டுமினிஸ்டர் மாளிகைக்கு அருகே தோழியர் பாங்ஹர்ஸ்டின் சிலை நிற்கிறது; தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்லிமெண்டுக்கு வரும் பெண்கள், உரிமைப் போர் நடத்திய அன்னருக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

பிரிட்டனில் 1918-ல் தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. அதன் பிறகுதான் அவர்கள் தேர்தலில் போட்டியிடவும் முடிந்தது. 21-வயதுடைய ஒரு பெண், இப்போது பார்லிமெண்டு தேர்தலுக்கு நிற்கலாம்.

அரசியலில் கலந்துகொளளும் பெண்கள், ஆண்களுக்குச் சமமாக பல முக்கியப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது பிரிட்டனில் சர்வசாதாரணமாகும்.

## குழந்தையைப் பாதுகாத்த நல்ல பாம்பு!

### படம் விரித்து குடை பிடித்ததாம்!

ஜுனகத், மே 24—

படமெடுத்தாடும் பாம்பு ஒன்று பச்சிளங் குழந்தை ஒன்றை பாதுகாக்கும் காட்சியை ஜுனகத் போலீசார் காணும் வாய்ப்புப் பெற்றனராம்.

குழந்தையைப் பெற்றெடுத்த பார்ப்பன விதவைப் பெண்மணியையும், அவரது ஆண் துணையையும் போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

'குழந்தையைப் பெற்ற அந்தப் பெண்ணுக்கு இல்லாமற்போய் விட்ட பரிவும் பாசமும், பாம்பு ஒன்றுக்கு—அதுவும் கொடு விஷம் கொண்ட பாம்பு ஒன்றுக்கு இருக்கிறதே' என்று போலீசார் ஆச்சரியப்பட்டனராம்!

கடும் வெய்யலையும் பொருட்படுத்தாமல் அந்தப் பெரிய நல்ல பாம்பு, படம் விரித்து, குழந்தைக்குக் குடை பிடித்துப் பாதுகாத்துக் கொண்டிருந்ததாகப் போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

குழந்தையைப் பெற்று வீதியில் விட்டெறிந்த அந்தப் பெண்மணி மீது வழக்குத் தொடர்ந்துள்ளனராம் போலீசார்!

# சென்னையில் காகிதத் தொழிற்சாலை

## மத்திய சர்க்காருக்கு சென்னையின் கடிதம்

புதுடில்லி, மே 23—

சென்னை மாநிலத்தில் ஒரு காகித உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கான பொருளாதார வசதி பற்றி பத்தாண்டு காலமாக நடைபெற்று வரும் ஆராய்ச்சி என்ன வாயிற்று என்று தெரிவிக்குமாறு இந்திய சர்க்காரை சென்னை சர்க்கார் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்க விவசாய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக்கிற்கு, சென்னை விவசாய மந்திரி பக்தவத்சலம் எழுதியுள்ள கடிதமொன்றில், சென்னை மாநிலத்தில் தொழிற்சாலைக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் கிடைப்பதாலும், இதர வசதிகள் இருப்பதாலும் இங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவ முடியும், என்று எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## 'கண்ணிய உடை இயக்கம்'

"தட்ப வெட்ப நிலைகளிலிருந்து உடலைக் காக்கவும், மானத்தைக் காப்பாற்றவும் ஏற்பட்ட இயற்கையான சாதனம்தான் உடை; ஆனல் துரதிருஷ்டவசமாக, இந்த இயற்கை உபயோகத்தைப் பின்பற்ருமல், தாங்களும் கெட்டுப் போவதுடன், பிறரையும் கெடுக்கும் வகையில் உடையை உபயோகிக்கின்றனர்"

என்று, உடல் தெரியும்படி பெண்கள் உடையணிவதைக் கண்டிக்கும் வகையில் கொழும்பு 'ஆர்ச் பிஷப்' டாக்டர் தாமஸ் கூரே கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள அந்தக் கடிதம் எல்லா மாதா கோவில்களிலும் படிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கத்தோலிக்கர்கள்— குறிப்பாகக் கத்தோலிக்க கோஷ்டிகள், 'கண்ணிய உடை இயக்கம்' ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஆர்ச் பிஷப், தன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

## பர்மாவில் தாக்குதல்

### கரேன்கள், கம்யூனிஸ்டுகளைப் பழி வாங்குகின்றனராம்!

கம்யூனிஸ்டுகளிடம் தங்களுக்கிருந்த தீராப் பகைக்குப் பழிவாங்கும் நோக்குடன், தாங்கள், பந்தயத்திற்காக விளையாட அழைத்த கம்யூனிஸ்டு கால் பந்தாட்டக் குழு ஒன்றை, கரேன் கிளர்ச்சிக்காரர்

(4-ம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கை இழக்கக் கூடாதாம்!

புதுடில்லி, மே 27—

"வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கண்டு இளைஞர்கள் நம்பிக்கை இழக்கக் கூடாது; அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு நிரம்ப வேலை கிடைக்கும்; சுதந்திரம் கிடைத்தபின் மிகக் குறுகிய காலத்திற்குள் பிரிவினையினல் ஏற்பட்ட அதிர்ச்சியையும், உணவு நெருக்கடி உள்பட பல பெரும் பிரச்சினைகளையும் நாடு சமாளித்திருக்கிறது; நாட்டின் ஆற்றலை இது காட்டுவதாயுள்ளது; எனவே, பரீட்சைகளை நன்ருக எழுதி உயர்ந்த முறையில் தேர்ச்சி பெறுவதில் மாணவர்களுக்கு உற்சாகம் குறையக் கூடாது,"

என்று அகில இந்திய மாணவர் காங்கிரஸ் 10-வது மாநாட்டில் பேசிய இந்திய சர்க்கார் வெளிநாட்டிலாகா உதவிமந்திரி டாக்டர் சையத் முகமது கூறியிருக்கிருர்.

## உடைந்த கப்பலில் 300 மனித எலும்பு கூடுகள்

இரண்டாவது உலக யுத்தத்தில், சைகோன் துறைமுகத்திற்கு அருகில், அமெரிக்க விமானங்களால் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானியக் கப்பலின் உடைபட்ட பகுதிகள் வெளியே எடுக்கப்பட்டபோது, 300 ஜப்பானிய போர் வீரர்களின் எலும்புக் கூடுகள் அதில் காணப்பட்டனவாம்!

# குடிபுகுந்தவர்கள் இழைத்த கொடுமை கண்டு கோதிப்பு

## அந்தமான் பழங்குடி மக்கள் போக்கு பற்றி அறிவிப்பு

அந்தமான் தீவுகளின் அபிவிருத்திக்கு, அங்குள்ள பழங்குடி மக்கள் எவ்வாறு எதிர்ப்பு காட்டுகின்றனர் என்ற விவரத்தை ஐ. நா. உணவு விவசாய சங்கம் சமர்ப்பித்துள்ள அறிக்கை குறிப்பிடுகிறது.

ஒருவகை இனத்தைச் சேர்ந்த சுமார் 1,000 பேர் காட்டுப் பிரதேசங்களில் வசிக்கின்றனர்; வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகியவைகள்தான் இவர்களுடைய தொழிலாகும்.

இவர்கள் குடியிருக்கும் பகுதிகளில், யாராவது தப்பித் தவறி சென்றுவிட்டால், அவர்களை அம்பெய்திக் கொன்று விடுகின்றனர்.

ஆரம்பத்தில், இந்தியாவிலிருந்து குடியேறிய மக்களும், பின்னர் ஜப்பானியர்களும் இவர்களை நடத்திய விதத்தினல்தான், குரோத மனப்பான்மையுடன் அவர்கள் காணப்படுகின்றனராம்!

## தாழ்த்தப்பட்ட ஒருவர் பிரதமராக வேண்டும்

### பிரதமர் நேருவின் ஆசை

'ஒரு ஆதிவாசி அல்லது ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர், இந்தியாவின் பிரதம மந்திரியாக வேண்டுமென நான் தனிப்பட்ட முறையில் விரும்புகிறேன்"

என்று, பிரதமர் நேரு அரித்துவார் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

'சாதி முறை பற்றிய நோக்கத்தில் மாறுதல் தேவை,' என்று பேசிய அவர், "எல்லாக் குடிமக்களுக்கும் சமத்துவம் என்ற நமது இலட்சியம், மிகக் கீழ்க்குடி பிறந்தோர் என்றழைக்கப்படுவோரும் மிக உயர்ந்த பதவிகளுக்கு வர முடியும் என்பதின் மூலம்தான் வெற்றி பெற முடியும்" என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

# 'மாவ் மாவ்' இயக்கத்தை ஒழிக்க கடும் இராணுவ நடவடிக்கை!

## பேச்சுவார்த்தைகள் முறிந்ததின் எதிரொலி

### மனித வேட்டையாட பிரிட்டன் முடிவு?

நைரோபி, மே 23—
'மாவ் மாவ்' இயக்கத்தினருடன் கென்யா அரசாங்கம் நடத்திய சமரசப் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதின் விளைவாக கடும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, 'மாவ் மாவ்' இயக்கத்தை ஒழித்துக்கட்டிவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த சில வாரங்களாக சில 'மாவ் மாவ்' தலைவர்கள் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டதாகவும், ஏராளமான 'மாவ் மாவ்' இயக்கத்தவரை சரணடையச் செய்வதாக அவர்கள் கூறியதாகவும், ஆனால், இதுவரையில் அவர்கள் நடைமுறையில் எதும் செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது.

## சர்வதேசப் புகழ்பெற்ற நீக்ரோ அம்மையார் மறைவு

### அடிமைகளாயிருந்த பெற்றோரின் 17-வது குழந்தையாவார்

பிளாரிடா, மே 23—
அமெரிக்க நீக்ரோப் பெண்கள் சங்கத்தை நிறுவிய தோழியர் மேரி பெதூன் அம்மையார் கடந்த புதன் கிழமை மாரடைப்பால் மரணமடைந்தார். அவர் ஐ. நா. சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் அமெரிக்க அரசாங்கத்தின் சார்பாக ஆலோசகராக இருந்தவர்; நீக்ரோக்களுக்குள் மிகச் சிறந்த கல்வித்துறை அறிஞராக விளங்கியவர்.

தோழியர் பெதூனின் பெற்றோர், அடிமைகளாயிருந்தவர்கள்; அவர்களுக்கு 17 குழந்தைகள்; அந்த 17 பேருள் ஒருவர் மேரி பெதூன். ஒரு மிஷன் பாடசாலையில் அவர் முதலில் படித்தார். பின்னர், பருத்தி விளைகளில் அவர் வேலை செய்தார்; அதன் பின், ஒரு பாடசாலை ஆசிரியர் அவரைப் படிக்க வைத்தார்.

1899ல், தோழியர் பெதூன் பெண்கள் பள்ளி ஒன்று தொடங்கி நீக்ரோச் சிறுவர்களைப் படிக்க வைத்தார். வேறொருவர் தமக்குச் செய்த உபகாரத்தை அவர் அநேகருக்குச் செய்தார். பிற்காலத்தில் அவர் ஆரம்பித்த பள்ளி, ஒரு மாணவர் பள்ளியோடு இணைக்கப்பட்டு பெதூன்-சுக்மன் கல்லூரி ஆயிற்று.

தோழியர் பெதூன், 1935-ல், நீக்ரோ பெண்களின் அமெரிக்க சங்கம் ஒன்று தொடங்கினர்; 1949 வரை அவரே அதன் தலைவராயிருந்தார்.

## இந்தியா இறக்குமதிசெய்த உணவுத் தானியங்கள்

புதுடில்லி, மே 24—
மே 18-ந் தேதியுடன் முடியும் வாரத்தில், இந்தியா, 14,100-டன் உணவு தானியங்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது. இதில், அமெரிக்காவிலிருந்து வந்த 6,700 டன் கோதுமையும், பர்மாவிலிருந்து வந்த 7,400 டன் அரிசியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1955 ஜனவரி 1-ந் தேதியி

விருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியங்களின் அளவு படிப்படியாக அதிகரித்து மொத்தம் 5,67,850 டன் ஆகியிருக்கிறது.

## இந்தி திணிப்பிற்கு!

### தமிழ்நாடு ம.சோ.கட்சி கண்டனம்

மதுரை, மே. 23—
தமிழ்நாடு ம. சோ. கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் பி. எஸ் சின்னதுரை தலைமையில் நடைபெற்றபோது, அகில இந்திய சர்வீஸ் பரீட்சைகளை இந்தியில் எழுத வேண்டுமென டில்லி முடிவு செய்யக்கூடாது என்றும், இதுபோல், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவரிடம் இந்தியைத் திணித்தால் மனக் கசப்பு ஏற்படுமென்றும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

# நாகர் தனி நாடு கோரிக்கை

## அசாம் மந்திரி ஆதரவு: காங்கிரஸ்வட்டாரத்தினர் கோதிப்பு

அசாம் மந்திரி சபையில் கலால், சிறை இலாகாக்களின் மந்திரியாயிருக்கும் ஜே. ஜே. எம். நிகலஸ் ராய் என்பவர், நாகர்களின் தனி நாடு கிளர்ச்சிக்கு நேரடியாகவே ஆதரவு தர முற்பட்டிருப்பதை ஒட்டி மந்திரி சபையில் பிளவு தோன்றியிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

'அவர் தொடர்ந்து மந்திரியாயிருப்பதை, அரசியல் சட்டம் அனுமதிக்குமா?' என்ற சிக்கல் வேறு எழுந்துள்ளதாம்.

'அவர் உடனடியாகப் பதவியை விட்டு விலக வேண்டும்' என்று உள்ளூர் பத்திரிகைகள் எல்லாம் காரசாரமான தலையங்கங்கள் தீட்டியுள்ளனவாம்.

"அவர் பதவியிலிருந்து விலக்கப்படுவதை நாகர் தலைவர்கள் தங்களுக்குத் தரப்பட்ட 'அறைகூவல்' என மதிப்பிடுவர்" என்று அவர்கள் எச்சரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் என்ன செய்வது என்பதை யோசிக்கவும், அசாமியர்களுக்கும் - வங்காளிகளுக்கும் உள்ள போட்டி மனப்பான்மை எப்படி சுமூகமாகத் தீர்ப்பது என்பதை ஆராயவும் இரு மாநில முதன் மந்திரிகளும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் கூடிப் பேசுவர் என்று தெரிய வருகிறது.

[குறிப்பு:— கடந்த மூன்றாண்டு காலமாகத் தலைமறைவாக இருந்துகொண்டே நாகர்களின் தனி நாடு கோரிக்கைக்கான இயக்கத்தை நடத்திவரும் ஏ. இஜட். பிஜோ. என்ற நாகர் தலைவர், அசாமுக்கு வருகை தந்த மாநில புனரமைப்புக் குழுவிடம் சர்வ சுதந்திரமுடைய நாக நாடு கோரிக்கையை நேரில் வலியுறுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது.
—ஆசிரியர்.]

# ரூ. 1,500 கோடி செலவில் இரயில்வே அபிவிருத்தி!

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெறும்

புதுடில்லி, மே 23—
இந்திய இரயில்வேக்களின் அபிவிருத்திக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவு ரூ. 1,480 கோடியாக இருக்குமெனத் தெரியவருகிறது.

முதல் திட்டத்தில் ரூ. 400 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது என்றும், அதனைப் போல் இப்போது மூன்றரை மடங்கு செலவேற்படும் என்றும் கூறப்படுகிறது.

புதிய இரயில் பாதைகள் அமைத்தல், பழைய பாதைகளைப் புதுப்பித்தல், மின்சார இரயில்களை மேலும் அதிக இடங்களுக்கு விரிவாக்குதல், பாதுகாப்பு முறைகள் போன்றவைகளுக்கு ஏராளமான தொகை ஒதுக்கப்படும் என்றும், பிரயாணிகளுக்கு அதிக வசதி செய்து தருவதற்காகமட்டும் ரூ. $1\frac{1}{2}$ கோடி ஒதுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

## இலங்கையில் மணவிலக்கு

### சுலபமாக்கும் வழி காண குழு நியமனம்

இலங்கையில் மணவிலக்குகளை சுலபமாக்கும் பொருட்டு, இலங்கை சர்க்கார், மணம், மணவிலக்கு ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்வதற்கான குழு ஒன்றை விரைவில் நியமிக்கும் என்று தெரியவருகிறது.

சென்ற ஆண்டில் மட்டும் 608 மணவிலக்குகள் ஏற்பட்டன என்றும், இத்தனை அதிகமாக இதுவரை மணவிலக்கு நடைபெற்றதில்லை என்றும், யுத்தம்முடிவுற்றதிலிருந்தே இலங்கையில்மணவிலக்கு அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

## நகராட்சி நிர்வாகம்

### பெண்களுடன் போட்டியிட்ட ஆண்கள் தோற்றனர்!

லண்டன், மே 24—
கடந்த ஆறு ஆண்டுக் காலமாக வார்விக்ஷையரில் உள்ள மிக அழகிய ஊரான பிஷப்ஸ் இட்சிங்டனில் பெண்களே பெரும்பான்மையினராக இருந்து நகராட்சி நிர்வாகத்தை நடத்தி வருகின்றனராம்.

தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகளாக இருந்துவந்த பெண்கள் நிர்வாகத்தினரைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்குடன், அங்குள்ள ஆண்கள் இந்த ஆண்டுத் தேர்தலின்போது 'சபதம்' எடுத்துக் கொண்டனராம். ஆனல், பரிதாபம்!—அவர்கள் தேர்தலில் படுதோல்வி அடைந்துவிட்டனராம்!

முன்னர் இருந்த 6 நகர சபை பெண் உறுப்பினர்களுமே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களனைவரும் வயது முதிர்ச்சியுற்ற 'பாட்டிமார்'கள் என்று தெரிகிறது!

இது தவிர, தேர்தலில் வெற்றி பெற்ற ஒரே ஒரு ஆண் உறுப்பினரும் எல்லோருக்கும் கடைசியாகக் குறைந்த வாக்குகள்தான் பெற்றாராம்!

# 'அச்சமின்றி அறிவியுங்கள்!'

இடைக்காலத்திற்குப் பிறகு எகிப்தில் எத்தகைய ஆட்சி அமைய வேண்டும் என்பதுபற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர், ஒரு சிறிதும் அச்சங் கொள்ளாமல் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று, எகிப்து சர்க்கார் இராணுவ அறிவிப்பொன்றில் கூறப்பட்டிருக்கிறதாம்.

இதை யொட்டி, பத்திரிகைகள் மூலமாகவும் தாங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்காக பத்திரிகைத் தணிக்கையும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# 2,500 முறை மனைவியை அடித்த கணவன்!

### 25 ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவம்!

அவளுக்கு வயது 41! அவன் மணஞ் செய்துகொண்டு 25 ஆண்டுகளாகின்றன.

அந்த 25 ஆண்டுகளில் 2,500 முறை அவளை அக்கணவன் அடித்துத் துன்புறுத்தி இருக்கிறான்.

அன்னு பென்ஜமின் என்ற பெயர் படைத்த அவள், சிகாகோ நகர நீதிபதி முன் மணவிலக்குக் கோரி மனு ஒன்று கொடுத்தாள்.

'நான் இனி அடிப்பதில்லை," என, அவன் நீதிபதி முன் வாக்குறுதி செய்தான்!

இருபத்தைந்து ஆண்டிற்குள் 2,500 முறை அவன் கையால் அடிபட்ட அவளும், அவன் கூறிய வாக்குறுதியை நம்பினாள்; மணவிலக்கு மனுவையும் திரும்பப்பெற்றாள்!

# 'அகதிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை துரிதப்படுத்துக!'

## மத்திய மந்திரி சுற்றறிக்கை

இடம் பெயர்ந்த அகதிகளுக்கு நஷ்டஈடு தரும் வேலையை, குறிப்பான முயற்சிகள் மேற்கொண்டு சீக்கிரமாகக் கொடுப்பதற்கான வழிவகை செய்யுமாறு பிராந்திய கமிஷனர்களுக்கு அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர் சந்த் கன்னா ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

நஷ்டஈடு தரும் திட்டத்தை அமுல் செய்வதற்காக இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 81 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதில் 18 கோடி ரூபாய் ரொக்க நஷ்டஈடாகவும், அடுத்த 15 கோடி ரூபாய் சொத்து ரூபத்திலும் தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

## மகனின் செலவைக் கண்டு மனக்கொதிப்பு!

### 'நேர்மையற்ற செயலு'க்கு நிசாம் கண்டனம்

ஐதராபாத், மே 23—
"புத்தாண்டுப் பிறப்பன்று இளவரசர் மோஜாம், ஒருநாள் உடை அலங்கார நடனத்திற்காக ரூ. 18,000 செலவிட்டார். தங்களைத் திருத்திக்கொள்வதாக எனது புதல்வர்கள் வாக்களித்திருந்தும், இப்படிப்பட்ட ஊதாரித்தனச் செயல்களில் அவர்கள் இன்னும் அழுந்திக்கொண்டிருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் அவர்கள் ஈராக் செல்வதற்குப் பதிலாக மெக்காவிற்குச் சென்று வருவதுதான் சிறந்தது என்பதே எனது யோசனை."

இவ்வாறு, நைசாம் மன்னர், தமது புதல்வர்கள் இருவரின் ஊதாரித்தனத்தைச் சுட்டிக்காட்டி, பத்திரிகை ஒன்றில் எழுதியிருக்கிறார்.

அவ்விருவர்களது ஊதாரித்தனத்தையும் கண்டித்து, அவர்கள் எவரிடமிருந்தாவது கடன் வாங்கினால் அதற்குத் தாம் பொறுப்பாளியாக முடியாது என்று சாம் மன்னர் ஏற்கனவே ஒருமுறை எழுதியிருந்தது நினைவிருக்கலாம்.

# அனுமதி வழங்கப்பட்டதோ ஆறு ஆலைகள் துவங்க!

## ஏற்பாடு செய்வதோ ஒரு ஆலை துவங்க மட்டுமே!

### அமைச்சர் பக்தவத்சலம் தகவல்

சென்னை, மே 23—
"ஆலையில்லாப் பகுதிகளில் கரும்பு உற்பத்தியாளர்களின் கஷ்டம் கடுமையாக உள்ளது; இவர்களுக்கு உதவியளிக்க இந்திய சர்க்காரைக் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும்,"
என்று, மந்திரி பக்தவத்சலம் கூறியிருக்கிறாராம்.

மாநிலத்தில் 'ஆறு சர்க்கரை ஆலைகளை நிறுவ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது; இவற்றுள் திருவாரூர் ஆலையைத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாயும், மற்றவை சம்மந்தமான ஏற்பாடுகளில் முன்னேற்றம் இல்லை என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

## ரூ. $8\frac{1}{2}$ லட்சம் செலவில் சேரி ஒழிப்பு

### தஞ்சை நகரசபை திட்டம்

தஞ்சாவூர், மே. 23—
ரூ. $8\frac{1}{2}$ லட்சம் செலவில் தஞ்சை நகரிலுள்ள 20 இடங்களில் சேரி ஒழிப்புத் திட்டமொன்றை தஞ்சை நகர சபை சர்க்காரிடம் சமர்ப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்திட்டத்தின் செலவில் பாதித் தொகை உதவியாகவும், பாதித் தொகையைக் கடனாகவும் தரவேண்டுமென்ற அடிப்படையில் அங்கீகரிக்கும்படி தஞ்சை நகர சபை, சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

# விலை வீழ்ச்சிக்குப் பரிகாரமாக கிராமங்கள்தோறும் தானியக் களஞ்சியமாம்!

### மத்திய உணவு மந்திரி ஜெயின் தகவல்

ஹரித்துவாரம், மே 24—
"விவசாயிகளின் உற்பத்திகளைச் சேமித்து வைப்பதற்கு நாடெங்கெனும் ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு தானியக் களஞ்சியம் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது,"
என்று இந்திய சர்க்கார் உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் சூசகமாக அறிவித்திருக்கிறாராம்.

"உற்பத்தியின் மதிப்பில் 80 சதவிகிதம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படும்," என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

"உணவுப் பொருள்களின் மார்க்கெட் நிலவரத்தைப்பற்றி பரிசீலனை செய்து அறிக்கை தாக்கல் செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது; விலைவாசிகள் அசாதாரணமாக உயருவது, சரிவது ஆகிய நிலைகளைச் சமாளிக்க அந்தக் குழுவின் சிபாரிசுகள் உதவியாயிருக்கும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"விலைவாசிகளின் வீழ்ச்சி ஒரு கடினமான பிரச்சினை; ஆனல், குறிப்பிட்ட உணவுப் பொருள்களின் விலைகளைப் பாதுகாக்க ஒரு அளவுக்கு உதவி அளிப்பதின் மூலம் இந்த நிலையைச் சமாளித்து விடலாம் என்று சர்க்கார் நம்புகிறது," என்றும் அவர் தெரிவித்தாராம்.

# கழகத்தின் பண்பு குறித்து அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள்; உலகத்திலே உள்ள மிகப் பெரிய பத்திரிகைகளின் நிருபர்கள்—பத்திரிகை ஆசிரியர்களைக் காட்டிலும் அதிகமான சம்பளம் பெறும் தனி நிருபர்கள்—அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு மெருகு கொடுத்து செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தனர்—உலகப் பத்திரிகைகள், பக்கம் பக்கமாக அவைகளைப் பிரசுரித்துக் கொண்டிருந்தன; ஆனால், அந்த மாநாடு, சாதாரணமாக நடைபெறவில்லை; அம்மாநாட்டை நடத்திய இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோனேஷியா, பர்மா ஆகிய நாடுகள் பல லட்சக்கணக்கான ரூபாய்களை அம்மாநாட்டிற்காகச் செலவு செய்துள்ளன; 'பாகிஸ்தான் மட்டும் ரூ. 20 லட்சம் மாநாட்டுச் செலவில் தன் பங்காகத் தந்தது' என்று செய்தி வந்தது; 'இத்தனை விமரிசையாக நடைபெற்ற பாண்டுங் மாநாட்டின்போது, நம்மிடம் ஒரு இருபதாயிரம் ரூபாய் இருந்திருந்தால், அங்கே நமது குரல் ஒலிக்கச் செய்திருக்கலாமே,' என்று நான் பதைத்தேன்.

"இந்தோனேஷியா, இந்தோ-சீனா இங்கெல்லாம் நமது கழகத் தோழர்கள் இருக்கின்றனர். இங்கிருந்து நமது தோழர் மதியழகனையோ, தோழர் சம்பத்தையோ அங்கு அனுப்பி, இந்தோனேஷியாவில் உள்ள நமது தோழர்களின் ஒத்துழைப்புடன், 'உலக சமாதானம் பற்றிப் பேசும் பண்டித நேரு, திராவிடரை அடிமை கொண்டிருப்பது நியாயமா? உலகத்தில் உள்ள காலனி நாடுகளின் விடுதலை பற்றி முழங்கும் பண்டிதர், திராவிடத்தைக் காலனியாக்கி ஆதிக்கம் புரிவது நியாயமா?'—என்பதற்கான விளக்கங்களைத் துண்டுப் பிரசுரங்களாக்கி, பாண்டுங் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், அங்கு வந்திருந்த பத்திரிகையாளருக்கும் தந்திருந்தால்........? நமது இலட்சியக் குரல் உலகெங்கும் எதிரொலித்திருக்காதா? 'மாவு இல்லை—அதனால் பணியாரம் இல்லை,' என்பதுபோல், பண வசதி இருக்கவில்லை, அது நடைபெற முடியாமல் போய்விட்டது.

"பிரிட்டிஷ் கயானா என்ற ஒரு சிறு நாடு — ஒரு மாவட்டத்தின் பரப்பளவுமட்டுமே கொண்டது—அங்குள்ள சட்டசபையில், பெருவாரியான இடம் பெற்று பிரதம மந்திரியாயிருந்த ஜெட்டி ஜெகன் இந்தியாவிற்கு வந்திருந்தார்; 'தன்னுடைய நாடு பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விலகவேண்டும்,' என்பதற்காக இங்கு வந்து கூட்டங்களில் பேசினர்; பண்டித நேருவைப் பார்த்து, தன்னுடைய நாட்டு விடுதலைக் கோரிக்கைக்கு ஆதரவு தருமாறு கோரினர்; இந்த நாட்டிலிருந்த பத்திரிகைகளெல்லாம் அவரது வருகையைப் பற்றியும், அவர் நாட்டின் விடுதலை கோரிக்கைகளைப் பற்றியும் விளம்பரம் செய்தன; இவ்வளவு பெரிய நாட்டின் ஆதரவை தன்னுடைய நாட்டின் 'விடுதலைக் கிளர்ச்சி'க்குத் திரட்ட ஜெட்டி ஜெகனால் எப்படி முடிந்தது? இங்கு வருவதற்குக் கப்பல், விமானக் கட்டணம் செலுத்த கட்சியிடம் வசதி இருந்தது; ஆனால் நம்மிடம் அது இல்லை; இத்தகைய வசதிகளையும் வாய்ப்புகளையும் பெறவுந்தான் தி. மு. கழகம் மாநில மாநாடு நடத்துகிறதே தவிர 'தேர்தலில் ஈடுபட்டே தீரவேண்டும்,' என்பதற்காக மட்டுமல்ல—மாநில மாநாடு நடத்துவது!"

## நோயும் நொடியும் இனி பிடிக்காது

"இன்று காலை, பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன்; 'இந்தக் கழகங்களோடு நான் சேரமாட்டேன்,'— என்று, திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் கூறிவிட்டாராம்! நல்ல வேளை! இனி நம் கழகத்தை எந்தவித நோயும் நொடியும் பிடிக்காது!"

## 'ஏன் இந்த இணைப்பு வேலை?'

"வேறொரு செய்தியையும் பத்திரிகைகளில் கண்டேன்—திராவிடர் கழகத்தையும், தி. மு. கழகத்தையும் ஒன்றாக இணைப்பதற்கு சட்டசபையில் உள்ள திராவிட சட்டசபை உறுப்பினர்கள் முயற்சிப்பதாக! அவர்களுக்கு ஏன் இந்த சிரமமான வேலை என்பது எனக்குத் தெரியவில்லை; திராவிடர் கழகம், நான் இருந்துவிட்டு வந்த இடம்; இருந்து எழிலாக்கிய இடம்; இன்று விரும்பினாலும் திரும்பிச் செல்லும் உரிமையை நான் வைத்துக்கொண்டிருக்கிறேன்; இந்த நிலையில் இருக்கும் எங்களை, ஏன், அவர்களுடன் இணைத்துவிட வேண்டும் என்று முயற்சிக்கிறார்களோ, தெரியவில்லை?

"நாம் ஏதோ திராவிடர் கழகத்துடன் இணைந்துவிட முயற்சிப்பதாகவும், அதனால் தோழர் சுயம்பிரகாசம் அவர்களை அணுகி, 'நீங்கள்தான் இதனைச் செய்ய வேண்டும்—வேறு வழியில்லை', என்று கெஞ்சுவது போலவும், நண்பர்கள் சிலர் நினைக்கிறார்கள்; பிரச்சாரத்திற்காக வேண்டுமானால், அவர்கள் அந்த நினைப்பைப் பயன்படுத்திக்கொள்வதில் நமக்கொன்றும் கவலை இல்லை; ஆனால், அவர்கள் உண்மையாகவே நம்புவார்களானால் அவர்கள் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள் என்று கூற விரும்புகிறேன்;

"பெரியாரிடம் தூது செல்பவர்கள், என்ன சொல்வார்கள் என்று நீங்கள் கற்பனை செய்து பாருங்களேன்—என்ன சொல்ல முடியும், பெரியாரிடம்?—'ஏதோ, சிறுவர்கள் தவறு செய்து விட்டார்கள்; எத்தனை நாளைக்கு அவர்கள் தனித்திருந்துவிட முடியும்?'—என்றுதான் சொல்வார்களே தவிர. 'தி. மு. கழகத்தில் இலட்சக்கணக்கான உறுப்பினர்கள் உள்ளனர்; ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் உண்டு,' என்றெல்லாம் கூறுவார்கள் என்ற நினைக்கிறீர்கள்? இதை எப்படி நான் யூகிக்கிறேன் என்றால், என்னிடம் அவர்கள் பேசும்போது—'எத்தனை நாளைக்கு நீங்கள் பெரியாரின் தவறைப் பாராட்டப் போகிறீர்கள்? என்றாவது ஒருநாள் சேர்ந்தானே வேண்டும்?'—என்ற முறையில் அவர்கள் என்னிடம் பேசுவதிலிருந்தே, 'பெரியாரிடம் என்ன பேசியிருப்பார்கள்,' என்று, நமக்குத் தெரிந்துகொள்ள முடியாதா? தூது செல்பவர்களின் இயல்பு அதுதானே!

"நாட்டு ஓடு பரப்பப்பட்ட கூரையில், மங்களூர் ஓடுகளை சுலபத்தில் பரப்பிவிடலாம்; ஆனால், மச்சு வீடு ஒன்றிற்கு மங்களூர் ஓடு மாற்றம் செய்ய முடியாதே! ஓடு பயனற்றது—மச்சு வீட்டிற்குத் தேவையற்றதே!

"ஒரு தனிப் பெரும் தலைவரின் செல்வாக்கு, புகழ், அனுபவம், ஆற்றல், சக்தி ஆகியவற்றையே முதலாக வைத்து இயங்கும் ஒரு கட்சியையும், ஜனநாயக முறைப்படி இயங்கும் ஒரு கட்சியையும் ஒன்றுபடுத்துவது என்பது எப்படி?

"ஒரு கட்சியில் பலருடைய விவாதத்திற்குப் பிறகே முடிவுகள் மேற்கொள்ளப்படும்; ஒரு கட்சியில் தலைவர் சொல்வதுதான் முடிவு!

இப்படி அடிப்படையிலேயே மகத்தான வேறுபாடு கொண்ட இரு கட்சிகளை ஒன்றாக எப்படி இணைக்கப் போகிறீர்கள்?

"பெரியார் அவர்கள் இந்த நாட்டில் பெற்றுள்ள செல்வாக்கின் அளவை இன்று எவரும் பெறவில்லை—பெறவும் முடியாது; இதைக் கூறுவதில் ஒளிவு மறைவு ஏன்? பெரியார் அவர்கள் தனிப்பெரும் தலைவர்; 'அண்ணாதுரைக்கு அதிக செல்வாக்கா, நமக்கு அதிக செல்வாக்கா? நெடுஞ்செழியனுக்கா—நமக்கா?' என்று, எங்களை அவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பது? கூடாதே, அது! நாங்கள் மிகச் சாமானியர்கள்!

"பெரியார் அவர்களே! நீங்கள், மா-சே-துங்கோடு, புல்கானினோடு, லெனினோடு, மார்க்சோடு ஒப்பிடப்பட வேண்டியவர்கள்; உங்களை, நாங்கள் அந்த நிலையில் வைத்துப் பார்க்க எண்ணினோம்; ஆனால்........? அது, உங்கள் 'துரதிருஷ்டமோ'(!) அல்லது எங்கள் 'துரதிருஷ்டமோ தெரியவில்லை—முடியாமல் போய்விட்டது.

"நான் இன்னும் தெளிவாகவே சொல்ல விரும்புகிறேன்—திராவிடர் கழக, தி. மு. கழக இணைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள், இந்த இரண்டிலுமே தொடர்பில்லாதவர்கள்; அப்படித் தொடர்பில்லாதவர்கள், இம்மாதிரி முயற்சியில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை; எனவே, இந்தச் சட்டசபை உறுப்பினர்கள் முதலில் ஏதாவது ஒரு கழகத்தில் சேர்ந்துவிட வேண்டும்; உங்கள் மனமார, 'எந்தக் கட்சி நல்லது' என்று நினைக்கிறீர்களோ, அதில் சேருங்கள்; 'தி. மு. கழகத்திற்கு வாருங்கள்,' என்று நான் கூப்பிடமாட்டேன்; 'தி. மு. கழகம் நல்ல இயக்கம்தான்' என்று எண்ணினால், சேருங்கள்; இல்லை—'இது, அரும்பு மீசைக்காரர்களின் இயக்கம்; எங்களுக்கு பெரியவர் தலைமைதான் வேண்டும்,' என்றெண்ணினால், தந்தை வீட்டிற்குப் போய்ச் சேருங்கள்; இப்படி ஏதாவது ஒரு கழகத்தில் சேர்ந்தான பிறகு, அங்கங்கு இருந்துகொண்டு, ஒன்று சேர்க்கும் கருத்தைப் பரப்புங்கள்; காரியமாற்றுங்கள்; அதை விடுத்து, இரண்டிலும் சேராமல் இருந்துகொண்டு இணைப்பு வேலையில் ஈடுபடுவது வேண்டாம் எனக் கூறிக் கொள்கிறேன்."

# 'கல்' அவர்களிடம்-கருத்து நம்மிடம்!

## தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் திண்டுக்கல் வருகை

"பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 31—5—55-ல் திண்டுக்கல் வருகிறார்கள்;

"அன்று, திண்டுக்கல் வட்டத்தின் சார்பில் மாநில மாநாட்டிற்கு நிதி அளிக்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது;

"திண்டுக்கல் வட்டத்தில் உள்ள தி. மு. கழகக் கிளைகள் நிதி வசூல் செய்து பொதுச் செயலாளர் அவர்களிடம் கொடுக்க வேண்டுகிறோம்;

"27—5—55-ல் கீழ்க்கண்ட ஊர்களுக்கு திண்டுக்கல் தோழர்களோடு வருகிறோம். தங்கள் ஊர்களில் நிதி வசூலுக்கு வேண்டிய ஒத்துழைப்புகளைத் தர வேண்டுகிறேன்;

"வருகை தரும் ஊர்கள்:—பட்டிவீரன்பட்டி, அய்யம்பாளையம், சின்னாளப்பட்டி, சித்தையங்கோட்டை, ஆத்தூர், மோலியமஹார், ஒட்டன் சத்திரம், இடையக் கோட்டை,"

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

### திருமணங்கள்

26—5—55 காலை 9 மணிக்கு; நெல்லிக்குப்பம், மேல்பட்டாம்பாக்கம், பெருமாள் கோவில் வீதி மணமகன் இல்லத்தில், தோழர் கே. ஆர். சபாபதி—தோழியர் தையநாயகி திருமணம், திரு அடிகளார் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

26—5—55 காலை 8½ மணிக்கு. சென்னை, வில்லிவாக்கம் அடுத்துள்ள திருக்கண்ணபுரம்ப்பேர், வேணுகோபால்சாமி வீதியில், தோழர் எம். கே. கபீர்தாசன்—தோழியர் கே. தௌசலை திருமணம், தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

## வெற்றிலை வியாபாரத்திலும் வடநாட்டார் ஆதிக்கம்

## ஜவ்வரிசித் தொழிலும் மெள்ள மெள்ள நசுக்கப்படுகிறது

## வட நாட்டு அதிகார வலிமையை விரைவில் வியாபாரிகளால் உணரப்படும்

சேலம் வரவேற்பில் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

"காந்தியாரின் அஹிம்சை முறைகளை அவர் மாண்ட பின்னர், அவருடைய உடலுடனேயே 'ராஜகட்ட'த்தில் வைத்துக் கொளுத்திவிட்டனர்."

"காங்கிரசார், காந்தியாரின் சிலையை வைத்திருக்கட்டும்; நாம், காந்தியாரின் அஹிம்சைக் கொள்கையை வைத்திருப்போம்! கல் அவர்களிடம் இருக்கட்டும் கருத்து நம்மிடம் இருக்கட்டும்!"

"நமது கொள்கையை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்; நாம் அமைதியான முறைகளைக் கையாண்டு, அஹிம்சை வழியில் நமது பணியினைச் செய்து வருகிறோம்."

"சில நாட்களுக்கு முன்னர் சேலம் அம்மாபேட்டையில் காந்தியார் சிலை அருகே பறந்த திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை அதிகாரிகளின் 'தயவுடன்' இறக்கிவிட்டனர்; இதுதான் ஜனநாயகமா? இதுதான் நீதியா?"

"பொது இடம் என்று கருதப்படுகிற இடத்தில், எல்லாக் கட்சிக் கொடிகளும் பறக்க வேண்டியதுதானே? தி. மு. கழகக் கொடியைக் காங்கிரசார் இறக்கி விடுகிறார்கள் என்றால், இதுதான் அஹிம்சையா? என்ன நீதி இது?"

"காங்கிரஸ் தோழர்கள் ஜனநாயகப் பண்புக்கு மாறாக நடந்து கொண்டார்கள் என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இப்பிரச்சினையில் நீதி கிடைக்கும் வரையில் அமைதியாக இருக்கவேண்டும்."

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 22—5—55 மாலை சேலம் மாவட்ட தி. மு. கழகத்தினர் 'வி' மார்க்கெட் மைதானத்தில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"இன்று திராவிட நாடு பிரிவதன் அவசியத்தை திராவிட மக்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்; குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டு வியாபாரிகள் வடநாட்டு ஆதிக்கத்தின் பிடிப்பை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"சேலம் மாவட்டத்தில் நன்கு செழித்து வந்த ஜவ்வரிசித் தொழிலை வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் நசுக்க வலிமை பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த மாவட்டத்து வியாபாரிகள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"வேலூர் (சேலம்) வட்டத்தில் விளையும் வெற்றிலை ஆண்டு தோறும் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு பம்பாய், ஆமதாபாத் போன்ற நகரங்களுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. அந்த வியாபாரத்தின் இலாபம் நமது நாட்டு வியாபாரிகளுக்கு கிடைத்து வந்தது; ஆனால், இப்போது, அந்த இலாபம் சங்ககிரியில் உள்ள வடநாட்டு மார்வாரிகளுக்குப் போகிறது;

"இதுபோன்ற நிலைமைகள் வளர்ந்துகொண்டே போகின்றன. கூடிய விரைவில் நமது நாட்டு வியாபாரிகள், நமது தொழில்களை நசுக்கி சிதைக்கும் அளவுக்கு வடநாடு அதிகாரம் பெற்றிருப்பதை உணர்ந்து கொள்வார்கள்."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

கால் பந்தாட்டப் போட்டி துவங்க சிறிது நேரத்திற்குமுன், கம்யூனிஸ்டு குழுவினரை அருகில் இருந்த காடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று அவர்களின் கைகால்களை மரங்களில் பிணைத்துக் கட்டிவிட்டு, துப்பாக்கியால் சுட்டு பழி தீர்த்துக் கொண்டனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.